செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 130 நாள் : 6/3/17

# செய்தி

மதராஸ் ரெஜிமெண்டல் சென்டர் மற்றும் தென் பிராந்திய இந்திய ராணுவக் பிரிவு இணைந்து நடத்தும், முன்னாள் படைவீரர்கள் திரளணி இம்மாதம் வருகிற வியாழக்கிழமை 09.03.2017 அன்று காலை 10.00 மணிக்கு திருமலை திருப்பதி, PLR திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இத்திரளணியில் இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் விபின் ராவத், SM,VSM,AVSM,ADC அவர்கள் தலைமையேற்று நடத்த உள்ளார்கள்.

இம்முன்னாள் படைவீரர்கள் திரளணியில் அனைத்து 52 ராணுவ ஆவணக்காப்பகங்கள் கலந்து கொண்டு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் சார்ந்தோர்களின் குறைகள், ஓய்வூதியம் பற்றிய குறைகள் கேட்டறிய உள்ளனர். மேலும், இத்திரளணியில் போர்விதவைகள் மற்றும் போரில் ஊனமுற்றவர்களுக்கு தகுந்த பரிசுப்பொருள்கள் வழங்கப்படும். இத்திரளணியில் ECHS மற்றும் கேன்டீன் சம்பந்தப்பட்ட அறிவுரைகள் வழங்கப்படும். மேலும் இத்திரளணிக்கு சிறப்பு மதிய உணவு அனைவருக்கும் வழங்கப்பட உள்ளது .

எனவே முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களை கௌரவிக்கும் வகையில் 09.03.2017 அன்று திருப்பதியில் நடைபெறும் **முன்னாள் படைவீரர் நல திரளணியில்** திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள். இதில் பங்குபெற விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் அல்லது கேண்டீனில் நாளை (07.03.2017) மாலை 05.00 மணிக்குள் தங்களது பெயரினை பதிவு செய்திடுமாறு **வேலூர் மாவட்ட** முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் எக்ஸ் பிளைட்.லெப்.ச.மணிவண்ணன்(ஓய்வு) அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

6/3/17

துணை இயக்குநர்

செ.ம.தொ.அ.
வேலூர்– 9.